
உ



அமரர் உயர்திரு. தம்பு ஜெகதீசசிங்கம்
(ஓய்வுபெற்ற கணக்காளர் Rtd. Accountant)

# நினைவு மலர்

03-10-2007

அம்பாள் துணை



யாழ்ப்பாண மாவட்டத்து, வடமராட்சியில்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட

## அமரர்

# உயர்திரு. தம்பு ஜெகதீசசிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காளர் Rtd. Accountant)

அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**03-10-2007**

# சமர்ப்பணம்

அன்பின் திருவுருவாய்,
பாசத்தின் சிகரமாய்,
பண்பின் பிறப்பிடமாய்,
நட்பின் இலக்கணமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அன்புத்தந்தையின்
உறவுக்கு ஈடாகாது என்பதனை
வாழ்வில் நிரூபித்த எங்கள்
குடும்ப குலஜோதி
ஆருயிர் தந்தைக்கு
வாசமலரெடுத்து வழுத்தும்
உங்கள் திருவடிக்கு
இந்த நினைவு மலரினை
காணிக்கையாக்குகின்றோம்.

**இஞ்ஙனம்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ஓம் விராட்விஸ்வப்பிரமனே நம.



**தோற்றம்:** 08-07-1923

**அமரர்**

**மறைவு:** 18-09-2007

# உயர்திரு. தம்பு ஜெகதீசசிங்கம்


(ஓய்வுபெற்ற கணக்காணர் Rtd. Accountant)

## திதி வெண்பா

சர்வசித்து வருடத்தின் புரட்டாதிச் செவ்வாய் சம்தமியாம் திதியதனில்
சீர்த்திருவின் தலைமகனாம் ஜெகதீசசிங்கம் இவ்வாழ்வின்
புவியை விட்டு ஈசனவன்
தாளை அடைந்த தினம்.

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

முஷிக வாகன மோதக கஸ்த
சாமர கர்ண விளர்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ரா
விக்ன விநாயக பாத நமஸ்தே.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோர்கள் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## திருவிருத்தம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பொற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டாதே இந்த மாநிலத்தே.

## திருவாசகம்

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
ஆடுகின்றிலை சூட்டுகின் றதும்இலை
துணையிலி பிணைநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வதொன் றறியேனே.

## திருவிசைப்பா

நிறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அன்பொன்சே யம்பலத்தரசே
வறணி கொடியெம் பீசனே யுன்னைத்
தொண்டனெ விசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன
விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



## திருப்புராணம்

ஞானத்தின் திருவுரவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மீசையன்றி மண்ணின் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்கொன்றை செஞ்சடையான் சீர்தொடுக்கும்
கானத்தின் ஏழு பிறப்பை கண்களிக்க கண்டார்கள்.

## திருப்புகழ்

அகரமுமாகி யதிபனுமாகி
யதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி
அரனெனவாகி அவர் மேலாய்
இகரமுமாகி யெவைகளுமாகி
இனிமையுமாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனது முன்னோடி வரவேணும்.
மகபதியாகி மருவும் வலாரி
மகிழ் கழி கூரும் வடிவோனே
வனமுறைவேடன் அருளிய பூசை
மகிழ் கதிர்காமம் உடையோனே
செககண சேகு தகுமிதி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதில் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க் மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# அமரர் உயர்திரு தம்பு ஜெகதீசசிங்கம் அவர்களின்

## (ஓய்வு பெற்ற கணக்காளர் Rtd. Accountant)

# வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாணப்பிரதேசத்தின் வடபால் அமைந்த நெய்தல் சூழ் வடமராட்சி மண்ணில் உடுப்பிட்டி எனும் ஊரிலே 1923ம் ஆண்டு ஆடித்திங்கள் 8ம் நாள், காலஞ்சென்ற தம்பு, இளையாச்சி ஆகியோரின் மூத்த மைந்தனாக வையமிதில் உதித்தார். இராஜேஸ்வரி, அபூர்வசிங்கம் ஆகியோர் இவரது சகோதரர்களாவர்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியிலும், தனது உயர் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் ஆங்கிலு மொழிமூலம் கற்றுத்தேர்ந்தார். 1943ம் ஆண்டு இறைவரித் திணைக்களத்தில் எழுதுவினைஞராக இணைந்து கொண்டார். 1944ம் ஆண்டிலிருந்து 1949ம் ஆண்டு வரை அதே திணைக்களத்தில் சேவையாற்றினார். 1949ம் ஆண்டிலிருந்து 1952ம் ஆண்டுவரை வவுனியா கச்சேரியிலும், 1953ம் ஆண்டிலிருந்து 1954ம் ஆண்டுவரை மின்சாரத் திணைக்களத்திலும், 1954ம் ஆண்டிலிருந்து 1970ம் ஆண்டுவரை கணக்காய்வுத் திணைக்களத்தில் கணக்காய்வுப் பரிசோதகர் (தரம் 1) ஆக கடமையாற்றினார். 1970ம் ஆண்டிலிருந்து 1975ம் ஆண்டு வரை யாழ்ப்பாணம், கல்வித் திணைக்களத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றினார். 1975ம் ஆண்டின் பிற்பகுதியி லிருந்து 1976ம் ஆண்டுவரை கொழும்பு, பெருந்தெருக்கள் திணைக்களத்திலும், புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்திலும் கடமையாற்றினார். 1977ம் ஆண்டிலிருந்து 1978ம் ஆண்டுவரை வவுனியா பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்திலும், 1978ம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து 1980ம் ஆண்டுவரை வவுனியா கச்சேரியில் கணக்காளராக (Accountant) கடமையாற்றி 1980ம் ஆண்டின் பிற்பகுதியில் ஓய்வு பெற்றார்.

தனது 24ம் வயதில் 1948ம் ஆண்டு ஆவணித் திங்கள் 7ம் திகதியன்று சிவக்கொழுந்து அலங்காரம் தம்பதியரின்



புதல்வியான உருக்குமணி (இராசபாக்கியம்) யைத் திருமணம் செய்தார். இல்லற வாழ்வை இனிதே நடாத்தி வந்த நாளில், 1950ம் ஆண்டு மூத்த புத்திரனாக பவானந்தசிவமும், 1954ம் ஆண்டில் இரண்டாவது புத்திரனாக புவனேந்திரனும், 1961ம் ஆண்டில் மூன்றாவது புத்திரனாக சத்தியேந்திரனும் பிறந்தனர். தனது மூன்று பிள்ளைகளுடனும், மனைவியுடனும் இன்புற்று வாழ்ந்து வந்த நாளில் தனது பிள்ளைகளுக்கு போதிய கல்வி புகட்டியதுடன் பொருத்தமான வகையில் மணம் முடித்தும் வைத்தார்.

அமரரின் மூத்தமகன் பவானந்தசிவம் 1950ம் ஆண்டு பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், பின்பு, உயர்கல்வியை இரத்மலானை இந்துக் கல்லூரியிலும் பயின்றார். இவருக்கு கட்டடத்துறையில் அதிக நாட்டம் கொண்டதால், பொறியியல்துறையில் கற்பித்து, பொறியியலாளராக சித்திபெறச் செய்தார். 1976ம் ஆண்டிலிருந்து 1998ம் ஆண்டுவரை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையில் பொறியியலாளராக வெலிக்கந்தை கெச்கிராவ பிரதேசங்களிலும், அதன்பின்பு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பிலும் கடமையாற்றினார். தற்சமயம் Vishnu property Developers, Roma Property Developers இல் பொறியியல் ஆலோசகராகவும் (Engineering Consultant), J.B. Construction Private Ltd Company Flats (தொடர்மாடிமனைகள்) இன் இயக்குனர் ஆகவும், வெள்ளவத்தை கொழும்பில் கடமையாற்றுகின்றார். இவர் அமரரின் சகோதரியின் மகள் செல்வத்திலகத்தினை திருமணம் செய்தார். இத்தகைய முன்னேற்றத்திற்கு அமரரான தந்தை அவர்கள் உறுதுணையாய் இருந்து வந்தார்.

இரண்டாவது மகன் புவனேந்திரன் 1954ம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக்கல்வியினை உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரியிலும் பின்பு, 6ம் வகுப்பிலிருந்து க.பொ.த (சாதாரண தரம்) வரை கொழும்பு இரத்மலானை இந்துக்கல்லூரிலும் பின்பு, க.பொ.த. (உயர்தரம்) கணிதப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரியிலும் பின் படவரைஞர் பாடநெறியைக் கற்று தேர்ச்சியடைந்து, படவரைஞராக (Draughtman) உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் இன்றுவரை கடமையாற்றுகின்றார்.

இவரின் முன்னேற்றத்திற்கு அமரரான தந்தை அவர்கள் வழிகாட்டியாகி உதவி புரிந்தார்.

மூன்றாவது மகன் சத்தியேந்திரன் 1961ம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக் கல்வியினை கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிலும், 6ம் வகுப்பிலிருந்து க.பொ.த. உயர்தரம் (உயிரியல் பிரிவு) வரை உடுப்பிட்டி அமெிக்கன்மிஷன் கல்லூரியிலும் கற்று தேர்ச்சியடைந்து, அதன்பின்பு உயர்படிப்பிற்காக அம்பாறை ஹாடி நிறுவனத்தில் N.D.T (Agriculture) விவசாய தொழினுட்ப டிப்புளோமா பட்டத்தினையும் பெற்றார். பின்பு, தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையில், யாழ் மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராக இன்றுவரை கடமையாற்றுகின்றார். அத்துடன் சமாதான நீதிவான் ஆகவும் சமூகசேவை செய்வதுடன் சட்டநாதர் ஆலய அபிவிருத்தி செயலக நிர்வாக காரியதரிசியாகவும், கணக்காய்வாளர் ஆகவும் சேவையாற்றி வருகின்றார். மேலும் கைதடி, சாவகச்சேரி கமநல சேவைக்குழு உறுப்பினராகவும் சேவை புரிகின்றார். இத்தகைய முன்னேற்றத்திற்காக உறுதுணையாக அமரரான தந்தை அவர்கள் விளங்கினார்.

இவ்வாறு கடைசிகாலம் வரை சுகதேகியாக இருந்தும் 17-09-2007இன் பின்னிரவில் தொடர்ந்து வந்த சளியடைப்பினால், 18-09-2007 விடியற்காலை திருநெல்வேலி தனியார் மருத்துவ மனைக்கு கொண்டு சென்று பின்பு, யாழ் போதனா வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு அதே தினம் காலை 11.40 மணியளவில் ஏற்பட்ட நெஞ்சுவலி, சளியடைப்பு காரணமாக யாழ். போதனாவைத்தியசாலையின் டாக்டர்களது சிகிச்சை பலனளிக்காமல் விதியது அழைக்க வாழ்வினை முடித்து,

**“வையத்து வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”**

என்ற குறளுக் கிணங்க சிவபெருமானின் திருவடி நிழலில் சங்கமித்தார்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.**

இவ் ஆத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததன்று. (இருந்து பிறகு இறந்து போவதன்று) இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது, காயம் கொல்லப்படுமிடத்தும் ஆத்மா கொல்லப்படுவதில்லை.

**- ஸ்ரீமத் பகவத்கீதை -**



# கண்ணீர் அஞ்சலி



**அமரர்**

## தம்பு ஜெகதீசசிங்கம்

**சட்டநாதர் ஆலய அபிவிருத்திச் செயலக நிர்வாக காரியதரிசியும், கணக்காய்வாளர் சத்தியேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை தம்பு ஜெகதீசசிங்கம் அவர்களின் மறைவை இட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

20-09-2007.

*சட்டநாதர் ஆலய தர்மகர்த்தாவும்*
*அபிவிருத்தி செயலக உறுப்பினர்களும்*

வெள்ளி யாழ். தினக்குரல் 21 செப்ரெம்பர் 2007

FRIDAY YARLTHINAKKURAL 21st SEPTEMBER 2007

தினக்குரல்

THINAKKURAL

## கண்ணீர் அஞ்சலி


எமது அலுவலகத்தில் கடமையாற்றும் படவரைஞர்
**திரு ஜே.புவனேந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்**
அமரர் தம்பு ஜெகதீசசிங்கம்
**(ஒய்வுபெற்ற கணக்காளர்)**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.



# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1923 ■ 07 ■ 08



உதிர்வு
2007 ■ 09 ■ 18

அமரர்

## தம்பு ஜெகதீசசிங்கம்

(ஓய்வு பெற்ற கணக்காளர்)

திரு.ஜெ.சத்தியேந்திரனின் (தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்) அன்புத் தந்தையாராகிய அமரர் தம்பு ஜெகதீசசிங்கம் காலமாகி பதனையிட்டு ஆழ்ந்த மனவருத்தத்தினையும், கண்ணீர் அஞ்சலியினையும் தெரிவித்து ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

றக்கா லேன் சமூகம்
சுண்டிக்குளி

பதிப்பு: ம.கினி பிறிண்டேர்ஸ் 620 k.k.s வீதி, நாச்சிமார்கோவிலடி. தொ.பே: 0779265002, 0213224617


வியாழக்கிழமை (20.09.2007) UTHAYAN-

20-09-2007

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கண்ணீர் அஞ்சலி



தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
ஜெ.சந்நியேந்திரன்
அவர்களின்
அன்புத் தந்தை

**தம்பு ஜெகதீசசிங்கம்**

அவர்கள் 18.09.2007 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
தென்னை அபிவிருத்திச் சபை
(64960) உத்தியோகத்தர்கள்,
யாழ்ப்பாணம். சக ஊழியர்கள்.



# அன்புடன் அப்பப்பாவுக்கு

உடுப்பிட்டியிற் பிறந்து
ஊர் புகழ வாழ்ந்து
உயிரற்ற ஆன்மாவாய்
உலவுகின்றீர்கள் எம்முன்னே!

மூன்று ஆண் மக்கட்கும்,
ஐந்து பேர்த்தியர்க்கும்
பேனா முனையின் தேவை தனை
ஆலோசனைகளாய் அள்ளித் தருவீர்கள்!

பேர்த்திமார் எல்லோரையும்
பெயர் சொல்லி அழைப்பதில்லை
"அப்பா" என்றழைத்து
அரவணைத்துக் கொள்வீர்கள்!

ஆண்டு மூன்று நான் படித்த காலமதில்,
ஆங்கிலம் சொல்லித் தந்தீர்கள்:
சோர்வுற்ற காலத்திலும் புத்தகம் வாசிப்பீர்கள் - பள்ளிச்
சோதனையின் விபரங்களை ஆர்வமாய்க் கேட்பீர்கள்,
முன்னேறிச் செல்லும் போது மும்முரமாய்ப் பாராட்டுவீர்கள்,
பக்கத்து நூலகத்தில் தவறாது பத்திரிகை படிப்பீர்கள்,
உற்றார் உறவினருடன் உறவாடி மகிழ்வீர்கள்
உயர் பதவிகள் வகித்து உதவி பல செய்தீர்கள்
உண்மைக்காய் என்றும் உறுதியுடன் போராடினீர்கள்
ஆலய மணியோசை அடிக்கடி கேட்கின்றதென்றே
ஆன்மா தனை ஆண்டவனுடன் சங்கமித்தீர்கள்.....!
பொக்கை வாயானாலும் அசலான ஆங்கில உச்சரிப்புகள்
யாக்கை நீறான போதும் யௌவனமாய்ச் சொல்கின்றன.

*பேர்த்தி*
**செல்வி தேவரஞ்சனா புவனேந்திரன்**

## தென்னையில் தேங்காய், குரும்பட்டிகளில் தாக்கத்தினை உண்டாக்கும் "மைற்" (Mite) பீடையை அழித்தல்

**அறிகுறிகள்**

தென்னங்குலைகளில் எல்லா பருவநிலையிலுமுள்ள காய்களின் வெளிப்புறத்தில் முகிழ் பகுதியில் கராவல் தன்மை காணப்படும். இது வளரும்போது, விகாரமடைந்து, பொச்சினை உரிப்பதற்கு கஷ்டமாக இருக்கும். அத்துடன் மட்டுமல்லாது, சிறிய குரும்பட்டிகளாயின் தேங்காயாக முற்றவிடாது, இளம் குரும்பட்டிகளிலே உதிர்ந்து, பொருளாதார நட்டமேற்படும். தேங்காய்களாக நாம் எடுக்க முடியாது.

**கட்டுப்பாடு**

**உள்ளிக் கரைசல்** : *நாம் இதனை வீட்டில் இலகுவில் தயாரித்துக் கொள்ளலாம்.*

**தயாரிப்பு முறை** :
*(1) 20g உள்ளியை 100ml தண்ணீரில் நன்றாக அம்மி அல்லது கிறைண்டரில் இட்டு அரைத்து துணியினால் வடித்து, ஒரு பாத்திரத்தில் வைக்கவும்.*
*(2) பின்பு 5g சவுக்காரத்தினை 100ml தண்ணீருடன் கரைத்து, உள்ளிக்கரைசலுக் குள் விடவும்.*
*(3) பின்பு, 20ml வேப்பெண்ணையும் அதனுள் இடவும்.*
*(4) எல்லாக் கரைசலையும் ஒன்று சேர்த்து, 1 போத்தல் தண்ணீர் விட்டு ஐதாக்கவும்.*

பின்பு, இந்த 1 லீற்றர் கலவையையும் கைத்தெளிகருவி உதவியுடன், ஒரு ஆளை மரத்தில் ஏற்றுவித்து, தென்னையின் குலைகளின் சகல பருவ நிலைகளுக்கும், குரும்பட்டி, தேங்காயின் முகிழ் பகுதியில் படத்தக்கதாக தெளித்து விடவும்.

தென்னையின் மைற் கட்டுப்பாட்டுக்கு இது மிகவும் சிறந்த முறையாகும்.



# தெங்கின் ஆயுர்வேத மருத்துவம்

01)தென்னம்பாளையைச்சீவி கள் எடுக்கலாம், சூரியன் உதயமாவதற்கு முன்பு இறக்கப்பட்ட இனிப்புள்ள கள்ளில் சிறிதளவு சீரகம் ஏலம், கற்கண்டு கலந்து விடியற் காலையில் குடித்துவரச் சுறுசுறுப்பும், தேகபூரிப்பும், தேககுளிர்ச்சியும் உண்டாகும். கள்ளிலிருந்து ஹாடி மருந்து தயாரிக்கப்படுகின்றது.

02.தென்னை மர வேரினை சிறுதுண்டுகளாக நறுக்கி 100கிராம் எடுத்து 400 மி. லீற்றர் தண்ணீர் விட்டு 200மி லீற்றராக வற்றவைத்து, தினமும் இருவேளை குடித்துவர கெற்பவாயுக் குத்து முதலிய ரோகங்கள் நீங்கி கருப்பை சுத்தமாகும். மகோதரம், பாண்டு, அடிவயிற்று நோ, சூட்டுவாயு நீங்கும்.

03.தென்னம்பூ, நீற்றுக்காய் நெய், கையாந்தரை லேகியம், நீற்றுக்காய்லேகியம், தென்னம்பாளை லேகியம் ஆகிய மருந்துகள் இதன் சாற்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாடு, வெள்ளை, எலும்புருக்கி, சிறுநீர்க்கடுப்பு, காமாலை, கிரகணி, பசியின்மை, உள்வெப்பு, பித்தபாண்டு முதலிய நோய்கள் தீரும், தென்னங் குரும்பைக் கயர்வயிற்றுப் போக்கு, இரத்தப்போக்கு, மாந்தம் போக்கும்.

04.முற்றிய தென்னம் பட்டையை வெட்டி உலர்த்தி, தூளாக்கி, 50 கிராம் தூளை 150மி. லீற்றர் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தோல் நோய்களுக்கு பூசலாம். தேமல்களுக்கும், சொறி, தோலில் ஏற்படும் வெடிப்புகளுக்கும் சில நாட்கள் பூசி வர நீங்கும்.

05.மூலத்தால் இரத்தம் போவதை நிறுத்தவும், உடல் சூட்டைத் தவிர்க்கவும், மார்பில் உள்ள சளியை வெளியேற்றவும் தென்னங் குருத்தினைத் தினமும் உண்டு வரவேண்டும்.

06. தென்னம் மட்டைச்சாறு அருந்திவர, பித்தக்கடுப்பு மலவாசல், சிறுநீர்க்கடுப்பு, அதிமூத்திரம் கட்டுப்படும். சில விஷக்கடிகளுக்கு இந்தச்சாறு குடிநீராகப் பயன்படுகின்றது.

07. தேங்காய் எண்ணெய் புண்களையும், தோல் நோய்களையும் நீக்குகின்றது. தலைமயிரை நன்றாக வளரச் செய்கின்றது.

08. தென்னஞ்சாராயம் வயிற்றுநோ, குடல்நோ, அடிகாயம், முறிவு, நெரிவு போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகின்றது.

09. இளநீர் உடற்சூட்டைத்தணித்து, குளிர்ச்சியைக் கொடுக்கின்றது. அழற்சியை ஆற்றுகின்றது. சிறுநீரை வெளியேற்றுகின்றது. களைப்பு, சோர்வு, தாகம், உடற்தளர்ச்சி, சல எரிவு, கண்ணோய், தலைநோய், வாய் அவியல் நீங்கும்.

10. தேங்காய்ப்பால் வாய் அவியல், குடல் அவியல் வேக்காடு என்பனவற்றை நீக்கும். வெளிப்பாவிப்பில் வியர்க்குரு, தோல் வியாதிகள் நீங்கும். மாங்காய் பாலைமுறிக்கும்.

11. சிரட்டை தோல் ரோகங்கள், தோலின் நிறமாற்றங்கள் இவற்றை எண்ணெய் ஆக்கிப் பாவிக்கும்போது நீங்குகின்றது. சிரட்டைக்கரி குடலில் ஏற்படும் எண்ணெய்ச் சிக்கலை நீக்கும்.

12. தென்னை ஓலையைத் தலையிடிக்கு சுற்றிக் சுட்டினால் நீங்கும்.

13. பொச்சு, மட்டையைச் சாறு பிழிந்து சிலந்திக் கடிக்கு கொடுக்கலாம். நெருப்பில் வாட்டி ஒத்தடமும் கொடுக்கலாம். நெருப்பில் வாட்டி ஒத்தடமும் கொடுக்கலாம்.

இத்தகையை மருத்துவப் பயன்பாடு நிறைந்த தென்னை மரத்தினைப் பேணி பாதுகாத்து வளர்ப்பது நம் எல்லோருடைய வரலாற்றுக் கடமையாகும்.



# உளம்கனிந்த நன்றி நவில்கின்றோம்

கடந்த 18 – 09 – 2007 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர்

## உயர்திரு தம்பு ஜெகதீசசிங்கம்


அவர்களின் மரணச் சடங்கிலும், தொலைபேசி, தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வழங்கி அனுதாபம் தெரிவித்த சட்டநாதர் ஆலய தர்மகர்த்தாவுக்கும், அபிவிருத்தி செயலக உறுப்பினர்களுக்கும், மற்றும் நக்காலேன், சமூகத்தினருக்கும், உதயன் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் செய்தும், மலர்வளையம் வழங்கியும், அனுதாபம் தெரிவித்த தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையின், பிராந்திய முகாமையாளர் (வடக்கு) அவர்களுக்கும், சக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், எழுதுவினைஞர்கள், மற்றும் சக ஊழியர்கள் அனைவருக்கும், தினக்குரல் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் செய்தும், மலர்வளையம் வழங்கியும் தெரிவித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும், அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், நலன்புரிச் சங்கத்திற்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும், மற்றும் பலவழிகளில் வேண்டிய உதவிகள் நல்கிய அனைவருக்கும், இறுதிக்கிரியையின் போது உதவி செய்த அன்பு நெஞ்சங்களுக்கும். அந்தியேட்டி, சபிண்டிகரண கிரியைகள் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது துன்ப மத்தியில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இம் மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த துயா அச்சகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

66, சபாபதி வதி,
தலையாழி வைரவர் கோவிடி,
கொக்குவில்.
03-10-2007

**இங்ஙனம்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# அமரர் உயர்திரு. தம்பு ஜெகதீசசிங்கம் அவர்களின்

## வம்சவிருட்சம்



# வம்சா வழி

**மனைவி**

திருமதி ஜெ. ருக்குமணி (இராசபாக்கியம்)

**பிள்ளைகள்**

★ ஜெ. பவானந்தசிவம் - மகன் (பொறியியலாளர்)
★ ஜெ. புவனேந்திரன்- மகன் (படவரைஞர்)
★ ஜெ. சத்தியேந்திரன் - மகன் (தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**அமரரின் மருமகளிமார்**

★ திருமதி ப. செல்வத்திலகம்
★ திருமதி பு. கிருஷ்ணவேணி
★ திருமதி ச. றொஸ்லின்

**பெறாமகள்**

★ திருமதி மனோரஞ்சிதமலர் பாலபரமேஸ்வரன்

**மருமகன்**

திரு. கந்தையா பாலபரமேஸ்வரன்

**அமரரின் உடன் பிறந்தோர்**

★ திரு. தம்பு அபூர்வசிங்கம் (ஓய்வுபெற்ற நிர்வாக அலுவலர், கணக்காளர், நீர்பாசனத்திணைக்களம்)
★ அமரர் திருமதி நா. இராஜேஸ்வரி

**அமரரின் தம்பியார் மனைவி**


★ திருமதி அ. பவளகாந்தி

**பேரப்பிள்ளைகள்**

செல்வி. ஜெகரூபி பவானந்தசிவம்
(மிருகவைத்தியர் மாநகரசபை, கொழும்பு)
செல்வி ஜெகமாலினி பவானந்தசிவம்
(வைத்தியர் போதனாவைத்தியசாலை கொழும்பு)
திருமதி ஜெகசுதா தீபன்
(சிறு பயிர் ஏற்றுமதித் திணைக்களம் நாரகென்பிட்டிய)
செல்வி ஜெகவனிதா பவானந்தசிவம்
(சமூகசேவை பட்டதாரிப் பயிலுனர், கொழும்பு பல்கலைக்கழகம்)
செல்வி தேவரஞ்சனா புவனேந்திரன்
க.பொ.த. (உயர்தரம்) உயிரியல் பிரிவு மாணவி கொக்குவில் இந்துக்கல்லூரி)
செல்வி யுசெந்தி பாலபரமேஸ்வரன்
(தேர்தல் திணைக்களம், கொழும்பு)
செல்வி சுகன்யா பாலபரமேஸ்வரன் (ஆசிரியை)
செல்வன் பாலபரமேஸ்வரன் நிஷாந்தன்
(ஜெயகிருஷ்ணா யுவலரி, யாழ்ப்பாணம்.)
செல்வி வினோஜா பாலபரமேஸ்வரன்
(தொழினுட்பக் கல்லூரி மாணவி, கொக்குவில்)

**பெறாமகன்**

திரு. அபூர்வசிங்கம் அனுஷ்காந்தன், குகன் யுவலரி, நெல்லியடி.


கீதாசாரம்
எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.
அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
Pillaiyar